பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆவணி 3 (19—8—72) சனி

வெளியூர்: ஆவணி 4 (20-8—72) ஞாயிறு [இதழ்: 56

## மூர் அங்காடிக்கு எதிரில் சுரங்கப் பாதை

சென்னை, ஆக. 19—

"சென்னை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் மூர் மார்க்கெட்டு எதிரில் நடந்துசெல்வோருக்கு எனச் சுரங்கப்பாதை ஒன்று ரூ. 11.50 செலவில் அமைக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது"

என்று, பொதுப் பணித் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

### சிம்சன் பிரச்சினை: சட்டப் பேரவையில் முதலமைச்சர் விளக்கம்

# அமைதி காத்திட ஒத்துழைப்பீர்

## அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் வேண்டுகோள்

### 'தொழிலாளர்கள் பழிவாங்கப்பட மாட்டார்கள்' என உத்தரவாதம்

சென்னை, ஆக. 19

"சிம்சன் தொழிற்சாலை, வருகிற 23—8—72 அன்று திறக்கப்படவிருக்கிறது; தொழிலாளரிடையே அமைதி காக்கப்படவும்--நிர்வாகிகளுடன் ஒத்துழைப்பு ஏற்படவும் அரசு எடுத்துக்கொள்கின்ற நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கவும் எல்லாக் கட்சியினரும் முன்வர வேண்டும்,

"ஒழுங்கும்--கட்டுப்பாடும்--கண்ணியமும் நிலவினால்தான் தொழில் அமைதி காக்கப்படும்; அத்தகையதொரு நல்ல சூழ்நிலையை எல்லாக் கட்சியினரும் உருவாக்க வேண்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று சட்டப் பேரவையில் கேட்டுக்கொண்டார்.

தொழிலாளர் பிரச்சினையில் தி.மு. கழக அரசு பாரபட்சமாக நடந்துகொள்கிறது--என்ற எதிர்க் கட்சிகளின் குற்றச்சாட்டை வன்மையாக மறுத்த முதல்வர், இந்த அரசு பாரபட்சமற்ற முறையில் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளையும் சான்றுகளாக எடுத்துரைத்தார்.

'சிம்சன் தொழிற்சாலை திறக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கையின் அடிப்படையில் இன்று சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"மூடிக் கிடக்கும் சிம்சன் தொழிற்சாலையைத் திறக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிவிட்டது" என்று குற்றஞ்சாட்டி, 'அதுபற்றி விவாதிக்க சட்டப்பேரவையின் நிகழ்ச்சி நிரலை ஒத்திவைக்க வேண்டும்' என்று கோரி எதிர்க் கட்சிகளைச் சார்ந்த பொன்னப்ப நாடார், டி. என். அனந்தநாயகி, எச். வி. ஹண்டே, கே. டி. கே. தங்கமணி ஆகியோர் தீர்மானம் கொண்டு வந்து பேசினர்.

இதற்கு முதலமைச்சர் பதில் அளித்தபின், 'மேற்கொண்டு இப்பிரச்சினையை விவாதிக்கத் தேவையில்லை' எனக் கருதி ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தள்ளுபடி செய்தார்—பேரவைத் தலைவர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:—

"தொழிலாளர் பிரச்சினையில் அரசு கண்டிப்பாக இருக்க வேண்டும் -- என்று எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் சொன்னதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு, தொழிலாளர் பிரச்சினையில் ஒருதலைப் பட்சமாக நடந்துகொள்கிறது -- என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதற்கில்லை; எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், சட்ட விரோதமாக நடந்து கொண்டால் -- வன்முறைகளில் ஈடுபட்டால் -- அவர்கள் மீது இந்த அரசும், காவல் துறையும் பாரபட்சமற்ற முறையில் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கொலையுண்ட தொழிலாளர் தலைவர் பிரதாப சந்திரன்கூட, கொலை செய்யப்படுவதற்கு ஐந்தாறு மாதங்களுக்குமுன் போலீசாரால் கைது செய்யப்பட்டு -- அவர்மீதும் வழக்குத் தொடரப்பட்டது என்பதை இந்த மன்றத்திற்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

எனவே, அரசு எந்தத் தொழிலாளர்கள்மீதும் பாரபட்சமாக நடந்துகொள்ளவில்லை.

சிம்சன் விவகாரம் கடந்த ஓராண்டுக் காலமாக வளர்ந்து -- அமைதியின்மை ஏற்பட்டதற்கு யார் காரணம்?

சிம்சன் தொழிற்சங்கத் தலைவராகக் காட்டூர் கோபால் இருந்தார்; 'அவர் தலைவராக இருக்கக்கூடாது -- பதவியிலிருந்து அவரை இறக்க வேண்டும்' என்பதையே கொள்கையாக -- கோரிக்கையாக வைத்து, எல்லா எதிர்க் கட்சியினரும் சேர்ந்து, 'காட்டூர் கோபால் தொழிலாளிகளைக் காட்டிக் கொடுக்கும் வகையில் ஒப்பந்தம் செய்து கொண்டுவிட்டார்; அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும்' என்று கூறினர்; 'தொழிற் சங்க நிர்வாக அமைப்பு மாற்றப்பட்டு வேறு நிர்வாகம் வந்தால் இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்' என்றெல்லாம் கூறினார்கள்; அதன் பிறகு, ஆறு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இதற்கிடையில், 'காட்டூர் கோபால் தலைவராக இருப்பது தேவையில்லை' என அவரை இராஜினாமா செய்யச் சொல்லி--குழுவிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது; பிறகு அந்தக் குழுவினரும் குழுவைக் கலைத்துவிட்டு விலகிக் கொண்டார்கள்; அதன் பிறகு தேர்தல் நடத்தப்பட்டது; தி. மு. க. தொழிற் சங்கம் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கியிருந்தது; இப்போதுள்ள புதிய நிர்வாகிகள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; இவர்கள் வந்த பின்னராவது அந்த ஒப்பந்தம் நீக்கப்பட்டதா என்றால், இல்லை.

ஒரு தொழிற் சங்கத் தலைவரும் -- ஒரு தொழிலாளியும் கொலையுண்டு செத்தார்கள்; இந்த அளவுக்குப் பரிதாபகரமான -- அளவு கடந்த வன்முறைகள் எல்லாம் எதனால் ஏற்பட்டன? காட்டூர் கோபால் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இவர்கள் வந்து மாற்றினார்களா என்றால், இல்லை; 'காட்டூர் கோபாலை நீக்க வேண்டும்' என்று எல்லாக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து எடுத்த முடி

(4-ம் பக்கம் பார்க்க)

# பி. அண்டு சி. ஆலை விரைவில் திறக்கப்படும்

## அரசாங்கத்தின் மீது தவறான குற்றச்சாட்டு வேண்டாம்

### சட்டப் பேரவையில் அமைச்சர் என். வி. நடராசன் விளக்கம்

சென்னை, ஆக. 19--

மூடப்பட்டுள்ள பி. அண்டு சி. ஆலை விரைவில் திறக்கப்படலாம் என்றும், பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்றுள்ளது என்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. என. வி. நடராசன் அவர்கள், இன்று சட்டப் பேரவையில் அறிவித்தார்.

மூடப்பட்டுள்ள பி. அண்டு சி. ஆலையைத் திறப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டி, 'அதுபற்றி விவாதிக்க வேண்டும்' என்று கோரி— அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு தீர்மானம் கொண்டு வந்து கம்யூனிஸ்டு உறுப்பினர் என். கே. பழனிச்சாமியும், இந்திரா காங்கிரசு உறுப்பினர் அனந்தநாயகியும் பேசினர்.

இதற்குப் பதிலளிக்கும்வகையில் அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"இந்தத் தீர்மானத்தின்மீதுபேசிய அனந்தநாயகி அவர்கள், பாதி உண்மைக்கு வந்திருக்கிறார்கள்; நான் பேசுவதைக் கேட்டபின், முழு உண்மையையும் உணருவார்கள் என்று நம்புகிறேன்.

அரசியல் ஆதிக்கத்தை வைத்து நாங்கள் தொழிற் சங்கத்தை வலுப்படுத்துவதாகக் கூறுவது தவறு!

எடுத்துக்காட்டாக ஒன்றைக்கூற விரும்புகிறேன்; பிரிட்டானியா பிஸ்கெட் கம்பெனியில் இரண்டு தொழிற் சங்கங்கள் இருந்தன; ஒன்று—தி. மு. க. சங்கம்; மற்றொன்று—ஐ. என். டி. யூ. சி. சங்கம்; 'இந்த இரண்டில் எதற்கு அங்கீகாரம்கொடுப்பது' என்ற பிரச்சினை வந்தபோது, ஒரு நடுவரை ஏற்படுத்திப் பரிசீலிக்கச் சொன்னோம்; தி. மு. க சங்கத்தைவிட ஐ என்.டி.யூ. சி. சங்கத்தில் சில உறுப்பினர்களே கூடுதலாக இருந்தார்கள் என்றபோதிலும், ஐ என்.டி.யூ. சி. சங்கத்தையே நடுவர் தீர்ப்புக்கு ஏற்ப ஏற்றுக்கொண்டோம்.

அதேபோல், பி. அண்டு சி. ஆலையிலும் அந்தோணி பிள்ளை தலைமையில் உள்ள சங்கத்தையே ஏற்றுக்கொண்டோம்.

சிம்சன் தொழிற்சாலையில் காட்டூர் கோபாலை இராஜினாமா செய்யச் சொல்லிவிட்டுத் தேர்தல் நடத்தி—வேறு ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தியிருக்கிறோம்.

பி. அண்டு சி. ஆலை விவகாரம் ஒரு வாரத்துக்கு முன்னால்தான் அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது; உடனடியாக அரசும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது; தொழிலாளர்களுடனும் -- நிர்வாகிகளுடனும் பேச்சு நடத்தினோம்; அரசாங்கச் செயலாளரும்-தொழிற் சங்கத் தலைவர்களும் பேச்சு நடத்தியதில் கூறப்பட்ட யோசனைகளை ஏற்றுத் தொழிலாளர் பிரதிநிதிகள், தொழிலாளர்களைக் கலந்துபேசி முடிவு தெரிவிப்பதாகக் கூறிச் சென்றுள்ளார்கள்.

நாளை அவர்கள் கூடி இதுபற்றி முடிவு செய்ய இருக்கிறார்கள்; நாளை மறுநாள் ஆலை திறக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## தற்காப்புக்கும் தாக்குதலுக்கும் வேறுபாடு தெரியாத ஏடுகளின் விஷமம்!

சென்னை, ஆக. 19—

சனநாயக நாட்டில் நடைபெறும் பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை மாற்றுவதற்குரிய அதிகாரம் மக்களுக்குத்தான் உண்டு; அதற்கிடையில், அராஜகத்தின் மூலம் ஆட்சியைக் கவிழ்த்து விடுவதென்றால் அதற்குச் சட்டம் எதற்கு?

"அப்படிக் கலைக்கப்படுமானால், நாட்டில் வன்முறைதான் தலைதூக்கும்; இந்த வன்முறைகளை ஒடுக்குவதற்கு இராணுவம் வந்தால்கூட, அதை மக்கள் சந்திக்கத் தயாராகத்தான் இருப்பார்கள்; இப்படியொரு நிலை ஏற்பட்டால் அது, சனநாயகத் தத்துவத்துக்கே பொருளற்றதாக ஆகிவிடும்!

'மதுரையில் நடந்த தி.மு. கழக மாநாட்டிலும் நான் இதைத்தான் குறிப்பிட்டேன்; ஆனால் நான் அப்படிச் சொன்னதைத் திரித்துச் சில பத்திரிகைகள் தற்காப்புக்கும்--தாக்குதலுக்கும் வேறுபாடு தெரியாமல் செய்தி வெளியிட்டிருப்பது வேதனையைத்தான் தருகிறது!"

---புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

(சங்கீத நாடக சங்கத்தின் ஆதரவில நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில்)

# தமிழக அரசின் 1,36,800 ஊழியரின் ஊதிய விகிதங்கள் மாற்றியமைப்பு

## ஊதியக் குழு பரிந்துரையின் வேறுபாடுகளை ஆய்ந்த பரிசீலனைக் குழு அறிக்கை அடிப்படையில் முடிவு

### ஆண்டுதோறும் அரசுக்கு ரூ. 5.50 கோடி கூடுதல் செலவாகும்

சட்டப் பேரவையில் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு--உறுப்பினர்கள் வரவேற்பு

சென்னை, ஆக. 19

தமிழ்நாடு அரசு ஊழியர்களில் 1 36 800 பேர்களின் ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன; பட்டதாரி ஆசிரியர்கள்--இளநிலை உதவியாளர்கள்--கிராம அதிகாரிகள்--பொறியர்கள்--கால்நடை துணை மருத்துவர்கள்--கண்காணிப்பாளர்கள் ஆகியோர் பயன் பெறுகின்றனர்.

இந்த ஊதிய மாறுதல்களினால் அரசுக்கு நடப்பு ஆண்டில் மட்டும் (மீதமுள்ள 6 மாதங்களில்) ரூ. 4 கோடி கூடுதல் செலவாகும்; அடுத்த ஆண்டு முதல் ரூ 5 50 கோடி கூடுதலாகச் செலவாகும்.

மாற்றியமைக்கப்பட்ட ஊதிய விகிதம் செப்டம்பர் 1ந் தேதி முதல் செயலுக்கு வரும்; அதாவது, அரசு ஊழியர்கள் அக்டோபர் மாதம் வாங்கும் ஊதியத்தில் இந்தக் கூடுதல் ஊதியம் கிடைக்கும். ஊதிய விகிதங்களைக் கணக்கிடுவதற்கு 1971-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ந் தேதி அடிப்படைத் தேதியாகக் கொள்ளப்படும்.

ஊதிய உயர்வு பற்றிய விவரங்கள் அடங்கிய அறிக்கையைச் சட்டப் பேரவையில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தாக்கல் செய்து பிரிவுகள் வாரியாகத் தெரிவித்தபோது உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரைகளில் எழுந்த முரண்பாடுகளை ஆராய்ந்து அறிக்கை அளிக்க ஒரே உறுப்பினர் கொண்ட குழு, அறிக்கையைக் கொடுத்தது; அந்த அறிக்கையின் அடிப்படையில் எடுத்த முடிவுகளை முதலமைச்சர் அறிவித்தார்.

ஒருவர் குழு அறிக்கையையும்--பல்வேறு சங்கங்களிடமிருந்து வந்த மனுக்களையும் பரிசீலித்து--முடிவுகளை அரசு செய்தது.

இரண்டாவது ஊதியக் கமிஷனின் பரிந்துரையையொட்டி சில வகையான அரசு ஊழியர்களுக்கு ஊதிய விகிதத்தில் காணப்பட்ட வேறுபாடுகளை ஆராய்ந்து--அரசுக்கு அறிக்கை அளிக்க அரசுத் தலைமைச் செயலாளர் சபாநாயகம் தலைமையில் ஒரு குழுவை மாநில அரசு நியமித்திருந்தது; சபாநாயகம் குழு செய்துள்ள பரிந்துரைகளை அரசு ஆராய்ந்து--பின்னர் எடுத்த முடிவுகளைத் சட்டப் பேரவையில் கேள்வி நேரத்திற்குப் பிறகு முதலமைச்சர் அறிவித்தார்.

முதலமைச்சர் அளித்த அறிக்கையின் விவரமாவது :—

"இரண்டாவது ஊதிய ஆணைக் குழுவின் பரிந்துரைகளையொட்டி அரசு எடுத்த முடிவுகளில் தென்பட்ட முரண்பாடுகளைப் பற்றி ஆராயத் தனி நபர் குழு ஒன்றை அரசு நியமித்ததை உறுப்பினர்கள் அறிவர்; அண்மையில் இக்குழு அளித்த அறிக்கையினையும்--பல்வேறு அலுவலர் சங்கங்கள் கொடுத்த விண்ணப்பங்களையும் அரசு ஒருசேர ஆராய்ந்தது; அதையொட்டி அரசு எடுத்த முடிவுகளை அறிவிக்க விரும்புகிறேன் :—

1. பட்டதாரி ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள் தற்போது உள்ள ரூ. 275-10-375-15-450 என்பதிலிருந்து, ரூ. 300-10-350-15-500 ஆக மாற்றி உயர்த்தப்படும்.

இதனையொட்டி, நேர்முகத் தேர்வுக்கு பட்டப் படிப்பு தகுதியாக அமைந்துள்ள முதநிலை கூட்டுறவு ஆய்வாளர், காவல் துறை சப் இன்ஸ்பெக்டர்கள், தலைமைச் செயலக உதவியாளர்கள், மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் ஆகியோர் ஊதிய விகிதங்களும், தற்போது உள்ள ரூ. 275-10-375-15-450 என்பதிலிருந்து ரூ. 300-10-350-15-500 என மாற்றி உயர்த்தப்படும்.

இந்த உயர்வினால் பட்டதாரி ஆசிரியர்கள் 25,000 உட்பட 31,000 பேர் பயன் பெறுவர்.

2. கால்நடை துணை மருத்துவர்கள் ஊதிய விகிதம் தற்போதுள்ள ரூ. 400-15-475-20-575-25-650 என்பதிலிருந்து ரூ. 425-20-525-25-700 என மாற்றி உயர்த்தப்படும்.

இதன் பயனாக 900 பேர் பயன் பெறுவர்.

3. இளம் பொறியாளர்கள் ஊதிய விகிதங்கள் தற்போதுள்ள ரூ 400-15-475-20-575-25-650 என்பதிலிருந்து ரூ. 425-20-525-25-700 என மாற்றி உயர்த்தப்படும்.

இதன் விளைவாக ஏறத்தாழ 1,900 பேர் பயன் பெறுவர்.

4. இளநிலை உதவியாளர்கள் ஊதிய விகிதங்கள் தற்போது உள்ள ரூ. 200-5-250-10-300 என்பதிலிருந்து ரூ. 210-5-245-10-325 என மாற்றி உயர்த்தப்படும்.

இதன் பயனை ஏறத்தாழ 30,000 பேர் பயனடைவர்.

5. தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் உதவியாளர்கள் ஊதிய விகிதம் தற்போதுள்ள ரூ. 250-10-400 என்பதிலிருந்து ரூ. 250-10-300-15-450 என மாற்றி உயர்த்தப்படும்.

இதனால் ஏறத்தாழ 13,000 பேர் பயன்பெறுவர்.

6. தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் கண்காணிப்பாளர்கள் ஊதிய விகிதம் தற்போதுள்ள ரூ. 350-15-500-20-600 என்பதிலிருந்து ரூ. 350-15-425-25-600 என மாற்றியமைக்கப்படும்.

இதன் பயனாக ஏறத்தாழ 1,100 பேர் பயன் பெறுவர்.

7. வருவாய்த் துறையின் கீழ் வரும் கிராம அதிகாரிகள்--ஊழியர்கள் மதிப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 7 வீதம் உயர்த்தப்படும்.

மொத்தம் 54,000 பேர் இதன் பயனை எய்துவர்.

8. இடைநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஊதிய விகிதம் தற்போதுள்ள ரூ. 225-5-250-10-350 என்பதிலிருந்து ரூ. 250-10-400 என மாற்றி உயர்த்தப்படும்; இத்துடன் தேர்வு நிலை ஆசிரியர்களிடமிருந்து தலைமையாசிரியர்களை வேறுபடுத்திக் காட்ட சிறப்பூதியமாக மாதம் ரூ. 15 அளிக்கப்படும்.

இதனால் 4,900 தலைமை ஆசிரியர்கள் பலனடைவர்.

ஊதிய விகிதங்கள் தற்போது மாற்றியமைக்கப்படும் பதவிகள் தவிர்த்த மற்ற பதவிகளில் புதிய விகிதங்களில் ஊதியத்தை நிர்ணயிக்கும் முறை மாற்றியமைக்கப்படும்; இதன்படி, பழைய பணிக் காலத்திற்கு இரண்டு-இரண்டு; மூன்று--மூன்று ஆண்டுகளில் பணிக்கு ஓர் உயர்வு வீதம் என நான்கு உயர்வுகளுக்கு மேற்படாது சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

கடைநிலை ஊழியர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வோர் இரண்டாண்டுக்கும் ஓர் உயர் எனக்கொண்டு--ஐந்து உயர்வுகட்கு மேற்படாத ஊதியம் நிர்ணயிக்கப்படும்.

இவை தவிர, தனி நபர் குழு சொல்லியுள்ள பல்வேறு பரிந்துரைகள் மீது அரசு விரைவில் ஆய்வு செய்து ஆணைகள் பிறப்பிக்கும்.

தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியில் அரசு மனமுவந்து அளித்துள்ள இச்சலுகைகளை அனை

(8-ம் பக்கம் பார்க்க)

வரும் வரவேற்றுப் போற்றுவர் என்றும், இந்த அவை, தனது ஆதரவை நல்கும் என்றும் நம்புகிறேன்."

## என். ஜி. ஓ. சங்கத்தின் உளமார்ந்த வரவேற்பு

என் ஜி ஓ சங்கத்தின் தலையாய கோரிக்கைகளில் பலவற்றைத் தமிழக அரசு பரிவுடன் ஏற்று முதலமைச்சர், பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதியினரின் ஊதிய அமைப்பில் பல உயர்வுகளை அறிவித்துள்ளதை உளமாரப் போற்றி--வரவேற்று--நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளதாக என் ஜி ஓ சங்கம் அறிவித்துள்ளது.

## சோப்புத் தூள் தொழிற்சாலை

### ஒரு தனியார் நிறுவனத்துக்கு மத்திய அரசு அனுமதி

சென்னை, ஆக. 18—

"தமிழ்நாட்டில் சலவை சோப்புப் பொடி (சித்தடிக் டிட்டர்ஜியண்ட்) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அனுமதி கோரி 5 பேர்களிடமிருந்து விண்ணம் வந்தது; 5 விண்ணப்பங்களையும் பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம்; 'அல்ட்ரா மெளன் அண்டிக் மெண்ட்' என்ற தனியார் நிறுவனத்துக்கு மட்டும் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது"

என்று, சட்டப் பேரவையில் தொழில் அமைச்சர் மாதவன், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அறநிலைய அமைச்சர்

### மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

ஆக. 20 காலை 7 30 மணி: ஒட்டன்சத்திரம் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. பழனிசாமி அவர்கள் திருமணத்தில் கலந்து கொள்ளல்; மாலை 3 மணி: பொள்ளாச்சி—தமிழ்நாடு துவக்கப் பள்ளி ஆசிரியர் முன்னேற்றக் கூட்டணி துவக்க விழாவில் கலந்து கொள்ளல்.

## தீவிர வாழைப்பழ உற்பத்தி

### தமிழ்நாட்டில் 62 இடங்களில் மாதிரிப் பண்ணை

அமைச்சர் தரும் தகவல்

சென்னை, ஆக. 18—

"வாழைப்பழ வாரியம் ஒன்றை மத்திய அரசு மூலம் ஏற்படுத்த முயற்சி நடக்கிறது; இப்போது தமிழ்நாட்டிலிருந்து மைசூருக்கு வாழைப்பழ ஏற்றுமதி நடைபெறுகிறது.

"நீண்ட தூரங்களுக்கு வாழைப்பழத்தை ஏற்றுமதி செய்யும் போது அது கெட்டுவிடாமல் தாங்கும்சக்தி உள்ளதாக ஆக்க ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

"மத்திய அரசு துவக்குகின்ற தீவிர வாழைப்பழச் சாகுபடித் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ஆயிரம் ஹெக்டேக்கர் வீதம் மூன்று ஆண்டுகளில் செங்கற்பட்டு மாவட்டத்தில் 3,000 ஹெக்டேர் நிலத்தில் வாழைப் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

"தமிழ்நாடு முழுவதும் 62 மாதிரி திட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன"

இத்தகவலை வேளாண்மை அமைச்சர் மன்னை நாராயணசாமி, சட்டப் பேரவைக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

# வேலையின்மைத் துயரைத் துடைக்கச் சிறப்புத் திட்டம்

## இளைஞர் அணியில் மேலும் தொண்டர்கள் சேர்க்கப்படுவர்

### பயிற்சிபெறாத 15,000 பேர்கட்கு வேலைவாய்ப்பு

சட்டப் பேரவையில் முதலமைச்சர் விளக்கம்

சென்னை ஆக. 18—

"வேலையின்மைத் துயரைத் தணிக்கும் பொருட்டு ஏற்கனவேயுள்ள திட்டங்களுக்குக் கூடுதலாக ரூ 438 இலட்சம் செலவில் சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டம் ஒன்றை நாம் மேற்கொண்டுள்ளோம்; இதில் ரூ 3 கோடி செலவாகும் கிராமச் சாலைத் திட்டமும் அடங்கும்; இதன் மூலம், 1,500 ம் அதற்கு மேலும் மக்கள் தொகையுடைய கிராமங்கள் அனைத்திற்கும் தார்ச் சாலைகள் வடிவில் எல்லாப் பருவ நிலைக்கும் ஏற்றச் சாலைகள் அமைக்கப்படும்.

'மேலும், இத்திட்டத்தின் மூலம் பயிற்சி ஏதும் பெற்றிராத 15 000 பேர்களுக்கும், பொறியாளர்கள்--நிர்வாகப் பணியாளர்கள் அடங்கிய மேற்பார்வைப் பணியாளர்களுக்கும் வேலை அளிக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

'இந்தச் சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டத்தில், இளைஞர் அணிக்குக் கூடுதலாக 1 450 ஆண் தொண்டர்களையும் -- 150 பெண் தொண்டர்களையும் சேர்ப்பதும் அடங்கும்; இதற்கு சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் செலவிடப்படும் மொத்தத் தொகையில் சுமார் ரூ 2 கோடி மத்திய அரசால் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது"

என்று சட்டப் பேரவையில், 1972--73 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகளை அளித்து உரையாற்றுகையில், முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :-

### நிதி ஒதுக்கீடு

"இந்த மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை, ரூ. 8,97,00 000 ஆகும்; இதில் ரூ 6,33 00,000 வருவாய்க் கணக்கின்கீழ் வருவதாகும்; எஞ்சிய தொகை, மூலதன -- கடன் கணக்குகளைச் சாருவதாகும்.

இக்கோரிக்கைகளில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கென ரூ 4.50 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கைகளின்கீழ் வரும் முக்கிய செலவினங்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்ட விழைகிறேன் :—

### அகவிலைப் படி உயர்வு

அரசு ஊழியர்களில் மாத ஊதியம் ரூ. 300-க்குக் குறைவாகப் பெறுபவர்கள் பெற்றுவந்த அகவிலைப் படியை, ரூ. 15 லிருந்து ரூ. 25-ஆகவும், ரூ. 300-க்கு அதிகமாகப் பெறுபவர்கள் பெற்றுவந்த அகவிலைப் படியை ரூ. 30-லிருந்து ரூ 40-ஆகவும் அரசு உயர்த்தியுள்ளது; இதற்கு ஆண்டுதோறும் ரூ. 6 கோடி கூடுதலாகத் தொடர் செலவாகும்.

தொடக்கச் செலவுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ. 1.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

### ஓய்வூதியம் உயர்வு

இதுவன்றி நாம் ரூ 62 இலட்சம் வேறு ஒதுக்கப்பட்டிருக்கிறது; அரசு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் -- அரசு ஆசிரியர்களல்லாத பிற ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படும் குறைந்த அளவு ஓய்வூதியத் தொகையை மாதமொன்றுக்கு ரூ. 40 ஆக உயர்த்தியதால் ஏற்பட்ட செலவும் இதில் அடங்கும்.

1960-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாளுக்கு முன்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்களும், கீழ்நிலைப் பதவி வகையைச் சேர்ந்த முன்னாள் நகராட்சிப் பணியாளர்களும் கூட, தாராளமாக்கப்பட்ட ஓய்வூதியங்களால் பயன் பெறுவர்.

முன்னர் குறிப்பிட்டதுபோல், அரசுப் பணியாளர் அனைவருக்கும் அகவிலைப் படியை பத்து ரூபாய் வீதம் உயர்த்தி வழங்கும்பட்டதை ஒட்டி தற்போது ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் -- இனி வருங்காலத்தில் ஓய்வூதியம் பெற இருப்பவர்களுக்கும் மாதமொன்றுக்கு ரூ. 8 அகவிலைப் படியாகக் கொடுக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

### மாவட்டத் திட்டப் பிரிவு

கீழ்மட்டத்திலிருந்தே திட்டமிடும் அடிப்படையில் அமைந்தால் மட்டுமே திட்டமிடும் பணி பயனுள்ள வகையில் உருவாக முடியும் என்பதை முழுமையாக உணர்ந்து--மாநிலத் திட்டக் குழுவின் ஒரு பகுதியாக, மாவட்டத் திட்டப் பிரிவுகளை நாம் அமைத்துள்ளோம்.

### மறுவாழ்வு இல்லங்கள்

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு வடஆற்காடு மாவட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் சிறப்புக் காப்பு மறுவாழ்வு இல்லங்கள் இரண்டினை நிறுவ அரசு அனுமதித்துள்ளது.

### விழி இழந்த ஏழைகளுக்கு...

கடந்த ஆண்டில் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தைக் கொண்டுவந்த இந்த அரசு, இந்த ஆண்டில் விழி இழந்த ஏழைகட்குக் கண்ணொளி வழங்கி வாழ்வில் ஒளிகாட்ட -- மாவட்டங்களில் இலவசக் கண்ணொளி வழங்கும் திட்ட முகாம்களை நடத்தி வருகின்றது.

இலவசக் கண் சிகிச்சை முகாம்களை நடத்துவதற்காகத் தேவையான பணியாளர்களுடனும் சாதனங்களுடனும் இயங்கும் கண் சிகிச்சைப் பிரிவுகள் ஐந்தினை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது; இதற்காக ரூ. 71.50 இலட்சம் தொடரா இனச் செலவும், ரூ. 8 60 இலட்சம் தொடர் இனச் செலவும் ஆகும். இது குறித்து தொடக்கத்தில் ஆகும் ரூ. 45.40 இலட்சம் செலவிற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது; இத்தொகை நாளடைவில் கண்ணொளி வழங்கும் திட்ட நிதியிலிருந்து நேர் செய்யப்படும்.

### ஊட்டச் சத்துணவுச் சிறப்புத் திட்டம்

மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டமாகிய ஊட்டச் சத்துணவுச் சிறப்புத் திட்டத்தை, சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளுக்கும் -- வெளியூர்களுக்கும் நீட்டிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதுவரை 3 வயதுத் தொகுதி சிறார்கள் மட்டுமே இத்திட்டத்தினால் பயனடைந்தனர்; எனினும் இந்த ஆண்டு, கர்ப்பவதிகளுக்கும் -- பாலூட்டும் தாய்மார்களுக்கும் -- 5 முதல் 6 வயது வரை உள்ள சிறார்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறக் குடிசைப் பகுதியைச் சேர்ந்த 2,10,000 சிறார்களும்—40,000 தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயனடைவர்; இத்திட்டத்திற்கு ரூ 83 இலட்சம் செலவாகும்.

### மீனள மேம்பாட்டுத் திட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ. 78 70 இலட்சம் செலவிலான மீனள மேம்பாட்டுத் திட்டம் ஒன்றிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது; இத்திட்டத்திற்காகும் செலவில் 75 சதவீதத்தை வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம் வழங்குகிறது; எஞ்சிய 25 சதவீதத்தை அரசு ஏற்கும்.

### இழப்பீட்டுத் தொகை

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமையாக்குதல்) சட்டத்தின் மூலம் வேளாண்மைத் தொழிலாளர்கட்குக் குடியிருப்பு நிலங்களை உடைமையாக்க முடிந்தது என்பதை மதிப்புக்குரிய உறுப்பினர்கள் அறிவர்; இச்சட்டத்தின் விதித் துறைகளைச் செயல்படுத்தும்போது எடுத்துக்கொள்ளப்படும் நிலங்களுக்காக இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்பட வேண்டியுள்ளது; இதற்காகும் செலவு ரூ 15 1 இலட்சம் ஆகும்

### கூடுதலாக முதலீடு

மத்திய நில வள வங்கி வெளியிட்டுள்ள கடனீட்டுப் பத்திரங்கட்குத் தொகை அளிக்கும் வகையில் ஒரு கோடி ரூபாயைக் கூடுதலாக அரசு முதலீடு செய்துள்ளது.

வேளாண்மை மறு நிதி உதவிக் கழகமும் -- உலக வங்கியும் அளித்துவரும் நிதி உதவியைக் கொண்டு கடன் வழங்கும் திட்டத்தை மத்திய நில வள வங்கி பெரும் அளவில் முனைப்பாகச் செயல்படுத்திவரும் இந்நேரத்தில், இப்போது செய்துள்ள முதலீடானது, வங்கி இன்னும் செவ்விய முறையில் செயல்படுவதற்குப் பேருதவியாக இருக்கும்.

### நிதி வழங்க அனுமதி

வரவு -- செலவுத் திட்டத்தை இம்மன்றத்தின்முன் வைத்து உரையாற்றுங்கால நான் அறிவித்தபடி, தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் அமைக்கப்பட்டுள்ளது; இக்கழகத்தின் பங்கு மூலதனத்திற்கென துவக்கத்தில் ரூ 25 இலட்சம் அளிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு திரைப்பட அரங்குக் கழகத்திற்குப் பங்கு மூலதனமாக ரூ. 10 இலட்சம் அரசு வழங்கியுள்ளது; இந்தத் துணை மதிப்பீட்டில் இவற்றிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது."


தமிழ்நாடு அரசு
பரிசுச் சீட்டு
பிள்ளைகளுக்குப் பிறந்த நாள் பரிசு
ரூ. ஒரு லட்சம் பரிசு பெறலாம்

மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 7,00,000*
முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)
குலுக்கல் நாள்: 31-8-1972
பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை.
விளம்பர வெளியீடு.
தமிழ்நாடு அரசு, சென்னை-9
*2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.





# கேலி பேசுவோர் தெளிவு பெறுவரா?

## நெசவாளருக்கு வாழ்வளிக்கவே அரசு முனைந்துள்ளது

### மத்திய அரசிடம் கோரிக்கைகளை வலியுறுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

அமைச்சர் செ. மாதவன் நிலைமை விளக்கம்

சென்னை, ஆக. 18—

"கைத்தறி துறையின் பாதுகாப்புக்கும் -- கைத்தறி நெசவாளர்களின் உரிமைகளைச் செயல்படுத்துவதற்கும் விரைவில் தகுந்த சட்டம் இயற்றப்படலாமென சட்டப் பேரவை கருதுகிறது" என்ற கே. டி. கே. தங்கமணியின் தீர்மானத்தின்மீது சட்டப் பேரவையில் விவாதம் நடைபெற்றது.

இந்தத் தனியார் தீர்மானத்தின்மீது சென்ற சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் விவாதம் முற்றுப் பெறவில்லை, அதனால் இந்த விவாதம் நேற்று தொடர்ந்து நடைபெற்றது.

விவாதத்திற்குப் பதிலளிக்கையில், தொழில அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் விளக்கிக் கூறியதாவது :—

'இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருப்பது, 'கைத்தறித் துணிக்கும் பாதுகாப்புத் தர வேண்டும்' என்ற நோக்கத்தோடுதான்; 'பொருளாதார அடிப்படையில் கைத்தறியின் வளர்ச்சிக்கு முயற்சிக்க வேண்டும்' என்பதுதான் தீர்மானத்தின் நோக்கமாகும்.

இந்த அரசு கைத்தறி வளர்ச்சிக்கு ஏராளமான முயற்சிகளை எடுத்துக்கொண்டது; இப்போதும் அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது; இதிலே மத்திய அரசின் பங்கு என்ன என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

'இன்னின்ன குறைகள் இருக்கின்றன' என்று குறிப்பிட்டு, 'இந்தத துறை சீர்பெறுவதற்கு இன்னின்னவைகளைச் செய்ய வேண்டும்' என்று மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்திப் பேசும்போது, எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்; மாறாக அரசின் திட்டங்களைக் கேலி பேசுவது பொருத்தமற்றது.

தமிழ்நாட்டில் ஐந்தரை இலட்சம் தறிகள் இருக்கின்றன; இருபது இலட்சம் நெசவாளர் இதை நம்பி வாழ்க்கை நடத்துகிறார்கள்; இவ்வளவு பெரிய துறையின் சார்பில் அந்த மக்களுக்கு வாழ்வளிக்க அரசு முனைந்திருக்கிறது.

நாம் கைத்தறித் துறை வளர்ச்சிக்காக கூட்டுறவுத் துறையின் மூலம் ஏராளமான வசதிகளைச் செய்து வருகிறோம்; நெசவாளர்களின் கூலிப் பிரச்சினைக்காகக் குழு அமைத்திருக்கிறோம்.

கைத்தறித் துறைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அரசே உதவக்கூடிய முறையைக் கொண்டுவர முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறோம்.

கைத்தறித் துறையில் புதிய -- நல்ல ரகங்களை உருவாக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் தேவையான ரகங்களை உற்பத்தி செய்வதற்கும் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நெசவாளர்களுக்கு எந்தெந்தத் துறையில் நாம் உதவிட வேண்டுமோ அந்தந்தத் துறையில் நாம் உதவி வருகிறோம். அந்த உதவித் தொகையும் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து வருகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு தறியின் அடிப்படையில் கடன் தரப்பட்டது; இன்று உற்பத்தியின் அடிப்படையில் கடன் தரப்படுகிறது.

எங்களிடம் ஆத்திரத்தோடு பேசுகிறவர்கள் மத்திய அரசிடமும் இதுபற்றிச் சொல்ல வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்வதை மாநில சங்கமே வாங்கி வைத்துக் கொள்வதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உற்பத்திக்கு ஏற்பக் கடன் கிடைக்கும் என்ற தைரியம் நெசவாளர்களுக்கு ஏற்படும் வகை செய்தால், அவர்களும் தைரியமாக உற்பத்தி செய்வார்கள்; இந்தக் கொள்கையின் அடிப்படையில் மத்திய அரசை வற்புறுத்துவோம்.

இந்த மாநில எல்லைக்குட்பட்டுக் கைத்தறிக்குத் தேவையான எந்த நெம்பர் நூலானாலும் அதைத் தரும் உரிமை மாநில அரசுக்கே இருக்கவேண்டும்; அப்போதுதான் குறைந்த விலையில் என்பதல்ல -- நியாய

(2-ம் பக்கம் பார்க்க)

# உணவுப் பொருள் தட்டுப்பாடு தமிழ்நாட்டில் வராது

—★—

## அமைச்சர் ப. உ. சண்முகம் அறிவிப்பு

சென்னை ஆக. 19--

"தமிழ்நாட்டு அரசிடம் அரிசி -- கோதுமை -- சர்க்கரை ஆகிய இன்றியமையாப் பொருள்கள் போதுமான அளவுக்குக் கையிருப்பு இருப்பதால், எந்த நிலையையும் சமாளிக்க முடியும்; தட்டுப்பாடு ஏற்படுமோ என்று பீதியடையத் தேவையில்லை -- அதற்கு அவசியமும் இல்லை; அப்படி ஏற்பட்டால், அதனைப் போக்குவதற்கு உரிய ஏற்பாடுகளை அரசு செய்யும்"

என்று உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள், சட்டமன்ற மேலவையில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"விலை உயர்வுக்குத் தமிழக அரசு பொறுப்பு அல்ல; மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைதான் அதற்குக் காரணமாகும்.

"தமிழ்நாட்டில் அதிகமாக விளையும் பொருள்களைத் தேவையான வேறு மாநிலங்களுக்கு வாங்கி விற்கும் பொறுப்பை உணவு வர்த்தகக் கார்ப்பரேஷன் எடுத்துக்கொண்டால், இடைத் தரகர்கள் குறைவதோடு -- பதுக்கலும் குறையும் -- என்று மாநில அரசு யோசனை தெரிவித்துள்ளது.

"உணவுக் கார்ப்பரேஷன் வசமுள்ள பருப்பு வகைகளைத் தமிழக அரசு கேட்டுள்ளது; அவர்கள் பருப்பு வகைகளை வழங்கினால், நியாயவிலைக் கடைகள்மூலம் அவைகளை வழங்க முடியும்; ஆனால், உணவு வர்த்தகக் கார்ப்பரேஷன், தன்னிடம் பருப்பு வகைகள் இருப்பு இல்லை என்று கூறிவிடுகிறது; வேறு மாநிலங்களில் கிடைக்கும் பருப்பு வகைகளை வாங்கிக் கொடுக்கும் பொறுப்பை உணவு வர்த்தகக் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ள வேண்டும்; இதனால், இடைத் தரகர்கள் குறைந்து பதுக்கலும் குறையும்.

"தமிழகத்தில் விளைந்திருக்கும் புன்செய்த் தானியங்களையும் வாங்கி இருப்பு வைத்து வேண்டிய பிற மாநிலங்களுக்கு -- விற்கலாமா என்பதுபற்றியும் அரசு பரிசீலித்துவருகிறது."

இன்றியமையா உணவுப் பொருட்களின் விலையேற்றம் பற்றியும் -- பற்றாக்குறை பற்றியும் கேட்கப்பட்ட கேள்விகட்குப் பதிலளிக்கையில் மேலும் அவர் கூறியதாவது:—

"உணவு நிலை குறித்து மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு இதுவரை தாக்கீது எதுவும் வரவில்லை; ஆயினும், இது சம்பந்தமாகப் பத்திரிகைகளில் வந்துள்ள செய்தியைக் கண்டு -- தமிழகத்தைப் பொறுத்த வரையில் -- பீதியடையக் காரணம் இல்லை.

"தமிழகத்தில் குடும்பக் கார்டுகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதால் நியாய விலைக் கடைகள் மூலம் அவை விநியோகம் செய்யப்படும்; எந்த நிலைமை ஏற்பட்டாலும் போதிய அரிசி இருப்பதால் நிலைமையைச் சமாளிக்க முடியும்.

தகவலும் சர்க்கரை விலை உயர்ந்திருப்பதற்குக் காரணங்களாகும்.

சோளம் -- மக்காச் சோளம் -- மிளகாய் -- புளி இவற்றின் விலைகள் இறங்குமுகமாக உள்ளன.

சமையல் எண்ணெய்களின் விலைகள் 1972 ஏப்ரல்வரை படிப்படியாக இறங்கி வந்தன; ஆனால், 1972 மே திங்களிலிருந்து குறைந்த உற்பத்தி காரணமாகவும் -- அதிகத் தேவை காரணமாகவும் அவற்றின் விலைகள் உயர்ந்து வந்துள்ளன.

பருப்பு வகைகள் -- பயறு வகைகள் ஆகியவற்றின் வரவு குறைந்துள்ளதாலும -- இரயில வாகன் பற்றாக்குறையாலும் அவற்றின் விலைகள் தொடர்ந்து அதிகமாகவே இருந்துவருகின்றன."

### நேர்த்தியான அரிசி வாங்குவதன் எதிரொலி?

பொதுவாக, விலை உயர்வு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுவதற்கில்லை; 1972 சனவரியில் நடந்த அறுவடையைத் தொடர்ந்து அரிசி விலைகள் இறங்கின; சென்னை நகரிலும் பிற இடங்களிலும் முதல் ரக-- நேர்த்தியான ரக அரிசியின் விலைகள்தாம் உயர்ந்தன; இதற்குக் காரணம், மக்கள் நேர்த்தியான அரிசி ரகங்களை அதிகம் விரும்பி வாங்குவதுதான்; மற்றபடி, ஏ.டி.டி.-27' போன்ற நடுத்தர அரிசிகளின் விலைகள், 1971 சூலையில் நிலவியதைவிடக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5-லிருந்து ரூ. 10-வரை குறைந்துள்ளன.

### சர்க்கரை விலை உயர்ந்ததேன்?

இந்த ஆண்டில் சர்க்கரை உற்பத்தி குறையுமென எதிர்பார்க்கப்படுவதும், அங்காடிகளுக்குக் குறைவான அளவுக்கே சர்க்கரை வழங்கப்படும் என்ற

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, வேலூர் அச்சகத்தில் (24, ஆர்கேஎம் பாவலர் சேர்ந்துநகர் தெரு, சென்னை-1...) [illegible] வெளியிடப்படுகிறது.

# சட்டப் பேரவைக் கூட்டம் நீடிப்பு

## அலுவல்கள் விவரம்

சென்னை, ஆக. 18—

தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டம் இத்திங்கள் 25-ம் நாள் வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

அவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அலுவல் விவரங்களையும் தெரிவித்தார்.

ஆக. 22-ம் நாள் துணை மதிப்பீடுகள் பற்றி விவாதம் நடைபெறும்.

ஆக. 21, 23 ஆகிய நாட்களில் அரசுத் தீர்மானங்கள்மீது விவாதம் நடைபெறும்.

ஆக. 24-ம் நாள் தனி நபர் தீர்மானங்கள்.

ஆக. 25-ம் நாள் துணை மதிப்பீடுக்கான நிதி ஒதுக்கல் மசோதா மீது விவாதம்.

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

**22--8--72**

**இடைப்பாடி**

15-வது வார்டு நாவலர் அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் மாலை 6 30 மணிக்கு உந்து வண்டித் திடலில்; தலைவர்: டி. கதிரேசன்; பேசுவோர்: வெ. கண்ணன், அ. ஆறுமுகம் எம்.எல்.ஏ., கா. பண்டரிநாதன், நா. நடேசன் எம்.சி., பழ. பெரியசாமி, ஆர்.வி. பெருமாள், சேட்டு டி. முத்து, டி. அண்ணாமலை, சுந்தரேசன் மற்றும் பலர்.

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

### சத்தியவாணி முத்து

நிகழ்ச்சிகள்

ஆக. 20 காலை 9 30 மணி: வேலூர்—திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல்; மாலை 4·15 மணி: அரூர்— அரிசனத் தொடக்கப் பள்ளியின் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்தல்.

போக்குவரத்துத் துறை அமைச்சர்

### ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

ஆக. 30 காலை 9 மணி: நெய்வேலி — திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல்; மாலை 5·30 மணி: கும்பகோணம்.

# சிம்சன் தொழிற்சாலைகள்

## 'ஆகஸ்டு 23 முதல் படிப்படியாகத் திறக்கப்படும்' என அறிவிப்பு

### நிர்வாகத்தினர் நிலைமை விளக்கம்

சென்னை, ஆக. 19-

"மூடப்பட்டுள்ள சிம்சன் தொழிற்சாலைகள் இம்மாதம் 23-ம் நாளன்று திறக்கப்படும்" என்று சிம்சன் நிர்வாகத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"வரும் புதன்கிழமை முதல் படிப்படியாகத் தொழிற்சாலைகள் திறக்கப்படும்" என்று நிர்வாகம் அறிவித்துள்ளது.

சில குற்றச்சாட்டுகளுக்காக 'சஸ்பெண்டு' செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு மனமுறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும், பழிவாங்கும் வகையில் அவர்கள்மீது நிர்வாகம் நடந்துகொள்ளாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

"தொழிற்சாலை திறக்கப்படும் 23-ந் தேதியன்று வேலைக்கு அனுமதிக்க முடியாத அந்தத் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில், அடிப்படைச் சம்பளம் - அலவன்சு சேர்ந்து 50 சதவிகிதம் வழங்கப்படும்" என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

விசாரணையை வெகு விரைவில் முடிக்க ஏற்பாடு செய்யப்படும்.

"விசாரணை முடிந்து - அந்தத் தொழிலாளர்கள் குற்றவாளிகள் அல்லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டால், அவர்கள் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன், சஸ்பெண்டு ஆகியிருந்த காலத்தில் மீதமுள்ள சம்பள பாக்கியும் சேர்த்துத் தரப்படும்" என்றும் நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தொழிற்சாலைக்கு உள்ளும் - வெளியேயும் தொழிலாளர்களுக்குத் தாக்குதலிலிருந்து முழுப் பாதுகாப்பு அளிக்க அரசு ஒப்புக்கொண்டிருப்பதையும் நிர்வாகம் சுட்டிக்காட்டியது.

இந்த அடிப்படையில், இம்மாதம் 23-ந் தேதி புதன்கிழமை முதல் படிப்படியாக மூடப்பட்டுள்ள சிம்சன் தொழிற்சாலைகளைத் திறக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக சிம்சன் நிர்வாகத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இந்த நல்லெண்ணத்தைப் புரிந்துகொண்டு தொழிலாளர்கள் சுமூகமாக வேலைக்குத் திரும்புவார்கள் என்று நம்புவதாகவும் நிர்வாகம் கூறியது.

# அமைதி காத்திட ஒத்துழைப்பீர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் விளைவுதான், இவ்வளவு குழப்பங்களுக்கும் காரணமாகும்.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் ஆகஸ்டு 15-ந் தேதியன்று ஆற்றிய ஓர் உரையில், 'ஏதாவது ஒரு தகராறு ஏற்படுமானால், அதில் எல்லா எதிர்க் கட்சிகளும் சேர்ந்துகொண்டு அரசை வற்புறுத்துகிறார்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார். அவர் பெரியவர்; அவர் இப்படிச் சொல்வதை சகித்துக் கொள்ளும் மனப்பான்மையைப் பெற்றிருக்கிறார்கள்; நான் சொன்னால், அதைச் சகித்துக் கொள்ளும் மனப்பான்மையை இங்குள்ளவர்கள் பெற்றிருக்கவில்லை.

'போர்முடிந்துவிட்டாலும் போரினால் ஏற்பட்ட விளைவுகள் இன்னும் நீங்கவில்லை; வேலைநிறுத்தங்கள் வேண்டாம்' என்று நான் கூறினால், அதைத்தொழிலாளர் தலைவர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள்!

காட்டூர் கோபால் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காகவே, 'அவரை விலக்க வேண்டும்' என்று போராட்டம் நடத்தினார்கள்; எதிர்க் கட்சியில் உள்ள அத்தனைப்பேரும் அணி திரண்டார்கள்; அதன் விளைவுதான் இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினை!

ஹாண்டே பேசும்போது, 'குற்றஞ்செய்தவர்கள் யாராகயிருந்தாலும் அவர்கள்மீது வழக்குப் போட வேண்டும்' என்றார்; அப்படித்தான் இந்த அரசு இதுவரையில் நடந்துவந்திருக்கிறது; வழக்குகள் இரு சார்பிலும் போடப்பட்டு வந்திருக்கிறது; இரு சார்பினரும் மாறி மாறி வன்முறையில் ஈடுபட்டபோது வழக்குகள் தொடரப்பட்டன; தி.மு.க. தொழிலாளர் 59 பேர் கடுமையாகத் தாக்கப்பட்டபோதும், அவர்கள்மீதும் வழக்குப் போடப்பட்டுதான் - பின்னர் அனைவர்மீதும் உள்ள வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன.

'சிம்சன் கம்பெனியில் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளான தொழிலாளர்கள்மீது விசாரணை நடைபெற்றபின், தவறான முறையில் யாரேனும் பழி வாங்கப்படுவார்களானால் அதை அரசு பார்த்துக்கொண்டிராது' என்ற உத்தரவாதத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், 'ஒரு நான்கு ஐந்து ஆண்டுகள் ஒழுங்கு நடவடிக்கையே எடுக்கக் கூடாது' என்ற முறையில் நிலைமை நீடிக்குமானால், பிறகு இவ்வளவு பெரிய ஒரு நிர்வாகத்தை நடத்துவதே இயலாமற் போய்விடும்; 'ஒழுங்கு நடவடிக்கையே எடுக்கக்கூடாது' என்று கூறுவது சரியல்ல; வேண்டுமென்றே யாரேனும் பழி வாங்கப்படுவார்களானால், அவர்கட்குப் பாதுகாப்புத் தர இந்த அரசு உத்தரவாதம் அளிக்கும்.

ஒழுங்கு நடவடிக்கை விசாரணை முடியும்வரையில், சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு அவர்கள் ஊதியத்தில் 50 சத

டியது

விகிதத்தை வழங்க நிர்வாகம் முன்வந்திருக்கிறது; இப்படிக் கொடுப்பது, அந்த நிர்வாகத்தின் விதிமுறை அல்ல என்ற போதிலும், இதற்கு நிர்வாகம் சம்மதித்துள்ளது.

எனவே, 23-8-72-ல் தொழிற்சாலை திறந்ததும், அமைதி நிலவ அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

'மேலும், கொலை விழுந்தால் என்ன செய்வது' என்கின்ற முறையில், 'ஏதோ நடந்துவிடக்கூடும்' என்று பேசுவதே வன்செயல்களுக்குத் தூண்டுகோலாக அமைந்துவிடும்; அனந்தநாயகி அம்மையார் போன்றவர்கள் அப்படிப் பேசுவது நல்லதல்ல; இப்படிச் சொல்வது -- தாலி கட்டும்போதே, 'விதவையாகி விடுவாயோ' என்று கூறுவது போல் இருக்கிறது."

கே.டி.கே. தங்கமணி:— அனுபவத்தை வைத்துத்தான் சொல்கிறோம்"

முதலமைச்சர்:— "தாலி கட்டியவர்கள் எத்தனையோபேர் விதவையாகியிருக்கிறார்கள்; இந்த அனுபவத்தை வைத்து, தாலி கட்டப்போகிற நேரத்தில்போய், 'நீ விதவையாகி விடுவாயோ என்று அஞ்சுகிறேன்' என்று சொல்லலாமா?

டி. என். அனந்தநாயகி:— "நான் அப்படித் தூண்டுவதற்காகப் பேசவில்லை; காந்தி வழி நடக்கும் நான் அப்படிப் பேசமாட்டேன்."

முதலமைச்சர்:— "ஆம்; இந்திரா காந்தி வழியிலும் -- காந்தி வழியிலும் நடப்பவர் தாங்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன்; நீங்கள் தூண்டுகிறீர்கள் என்பதல்ல -- அந்த நோக்கம் உங்களுக்கு இல்லை என்றாலும், இந்த நேரத்தில் இப்படிப் பேசுவது தூண்டுகோலாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்."

# விசைத் தறிகட்கு அனுமதி வழங்க முடிவு

சென்னை, ஆக. 19—

"கடந்த ஆண்டில் (1971-ல்) 1 917 விசைத் தறிகளுக்காக 574 அனுமதிச் சீட்டுகளும், நடப்பு ஆண்டில் சூன் திங்கள் முடிய 622 விசைத் தறிகளுக்காக 248 அனுமதிச் சீட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

"தமிழ்நாட்டில் மொத்தம் 12 500 விசைத் தறிகளுக்கு அனுமதி வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது"

என்று சட்டப் பேரவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் தெரிவித்தார்.

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

### ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

ஆக. 20 காலை 10 மணி: அலமேலுமங்காபுரம் (வேலூர்)—தாய் சேய் நல விடுதித் திறப்பு; 10-30 மணி: சத்துவாச்சேரி—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 11 30 மணி: செம்பேடு ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடத் திறப்பு; மதியம் 12 மணி: அகமேடு— ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடத் திறப்பு; பிற்பகல் 12·30 மணி: சிறுகாஞ்சி—இமுத்தநீர்த் தேக்கத் தொட்டி திறப்பு.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படலாம்; எனவே, அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை."

அமைச்சரின் விளக்க உரைக்குப்பின், ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவைத் தலைவரால் தள்ளுபடி செய்யப்பட்டது.